DINAMALAR DT. JULY 1, 07

# சுவீடன் பல்கலை.யுடன் சிஎம்சி ஒப்பந்தம்

வேலூர், ஜூலை 1-

ஐரோப்பாவில் உள்ள பிரபலமான மருத்துவ பல்கலைக்கழகங்களில் சுவீடன் நாட்டைச் சேர்ந்த கரோலின்கா பல்கலையும் ஒன்று. இந்த பல்கலை., யுடன் வேலூர் சி.எம்.சி மருத்துவ கல்லூரி ஒரு ஒப்பந்தம் செய்து கொண்டுள்ளது. இதற்கான கையெழுத்திடும் நிகழ்ச்சி சி.எம்.சி மருத்துவக்கல்லூரி வளாகத்தில் நேற்று நடந் தது.

இந்நிகழ்ச்சியில் கரோ லின்கா பல்கலைக்கழக ஒருங்கிணைப்பாளர் சஞ்சீவி, சி.எம்.சி மருத்துவமனை கண்காணிப்பாளர் நிகல் தாமஸ் உட்பட பலர் கலந்து கொண்டனர். இதன்மூலம் சி.எம்.சி மருத்துவக்கல்லூரி மாணவ, மாணவிகள் தங்களுடைய ஆராய்ச்சிகளை சுவீடனில் மேற்கொள்ள வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

10 தினத்தந்தி வேலூர் 1-7-2007 ★★★

# சுவீடன் பல்கலைக்கழகத்துடன் சி.எம்.சி. ஒப்பந்தம்

வேலூர், ஜூலை.1-

சுவீடன் நாட்டில் உள்ள மிக பெரிய பல்கலைக்கழகம் கரோலின்ஸ்கா பல்கலைக்கழகம். இந்த பல்கலைக்கழகம் மருத்துவ படிப்பு மற்றும் ஆராய்ச்சிகளில் ஈடுபட்டு வருகிறது. மேலும் இந்த பல்கலைக்கழகம், மருத்துவத்துறையில் சிறப்பான முறையில் பணியாற்றியதற்காக நோபல் பரிசு பெற்றுள்ளது.

இந்நிலையில் கரோலின்ஸ்கா பல்கலைக்கழகமும், வேலூர் சி.எம்.சி. மருத்துவ கல்லூரியும் இணைந்து மருத்துவ படிப்பு மற்றும் ஆராய்ச்சியில் ஈடுபடுவது என முடிவு செய்து, அதற்கான ஒப்பந்தத்தில், நேற்று கையெழுத்திட்டன. ஒப்பந்தத்தில், சி.எம்.சி. சார்பில் அதன் இயக்குனர் ஜார்ஜ் சான்டியும், கரோலின்ஸ்கா பல்கலைக்கழகம் சார்பில் பேராசிரியர் டாக்டர் சஞ்சீவியும் கையெழுத்திட்டனர்.

நிகழ்ச்சியில் டாக்டர்கள் நிகில் தாமஸ், ஜெயப்பிரகாஷ், முலியில் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

இதன்படி, சி.எம்.சி. மருத்துவ மாணவர்கள், பேராசிரியர்கள் சுவீடனுக்கும், கரோலின்ஸ்கா பல்கலைக்கழக மாணவர்கள், பேராசிரியர்கள் சி.எம்.சி. மருத்துவ கல்லூரிக்கும் வந்து மருத்துவ படிப்பு மற்றும் ஆராய்ச்சியில் ஈடுபடலாம் என்பது குறிப்பிடத்தக்கது.